திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்து முந்திரி பயிர் செய்வதற்கு கடன் கோரி அரசுக்கு மனு செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது. அதிலே எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தென் ஆற்காடு மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எத்தனை பேர்களுக்கு என்பதற்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கிறேன்.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது வரையில் சொன்னதெல்லாம் முந்திரி உற்பத்தியைப் பெருக்க என்னென்ன செய்யப்படுகிறது என்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தில் தொழில் நுட்பப்பள்ளிகள்

* 482 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மையை பெருக்குவதற்கு தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) விவசாயத்தில் தொழில் நுட்பப் பள்ளிகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்புகள் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விற்கப்படாமல் தேங்கியுள்ள உரம்

* 483 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஜனவரி முதல் ஜூலை முடிய தமிழ்நாடு அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உர வகைகளின் மதிப்பு எவ்வளவு ரூபாய் ?